சட்டப்பேரவையில்

# 2023 - 24 ஆம் ஆண்டுக்கான இறுதி துணை மதிப்பீடுகள்!

## நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு - தாக்கல் செய்து உரை!

சென்னை, பிப். 23-

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், நேற்று, நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு, 2023 - 2024 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை மதிப்பீடுகளைத் தாக்கல் செய்து உரையாற்றினார். பின்னர், இத்துணை மதிப்பீடுகள், குரல் வாக்கெடுப்பின் மூலம் நிறைவேற்றப் பட்டது.

சட்டப்பேரவையில் துணை மதிப்பீடுகளைத் தாக்கல் செய்து, நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு ஆற்றிய உரை வருமாறு:

2023-2024 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின் முன் சமர்ப்பிக்கிறேன். துணை மானியக் கோரிக்கையினை விளக்கிக்கூறும் விரிவான அறிக்கையினை இம்மாமன்றத்தின்முன் வைக்கிறேன். இந்த அவையில் வைக்கப்பட்டுள்ள இந்த துணை மதிப்பீடுகள் மொத்தம் 30,355.32 கோடி ரூபாய் நிதி ஒதுக்கத்திற்கு வகை செய்கின்றன. இதில் 26,590.09 கோடி ரூபாய் வருவாய் கணக்கிலும், 3,499.98 கோடி ரூபாய் மூலதனக் கணக்கிலும், 265.25 கோடி ரூபாய் கடன் கணக்கிலும் அடங்கும்.

2023 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 9 ஆம் நாளன்று 2023-2024 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள் சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் “புதுப் பணிகள்” மற்றும் “புது துணைப் பணிகள்” குறித்து ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினங்களுக்கு சட்ட மன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறுவது இத்துணை மதிப்பீடுகளின் முக்கிய நோக்கமாகும்.

துணை மதிப்பீடுகளில் கூடுதல் நிதியொதுக்கம் தேவைப்படும் சில முக்கிய இனங்கள் பின்வருமாறு:

மானியக் கோரிக்கை எண் 14-எரிசக்தித் துறை, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்திற்கு இழப்பீட்டு நிதியாக 15,593.95 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.



மானியக் கோரிக்கை எண் 51-இயற்கை சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, மிக்ஜாம் புயலால் பாதிக்கப் பட்ட சென்னை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளிலுள்ள குடும்பங்களுக்கு ரொக்க நிவாரண உதவியாக 1,486.93 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. மானியக் கோரிக்கை எண் 51-இயற்கை சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, எதிர்பாராத தொடர் மழைப் பொழிவு மற்றும் வெள்ளப் பெருக்கால் தென் மாவட்டங்களான திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங் களில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ரொக்க நிவாரண உதவியாக 541.37 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

மானியக் கோரிக்கை எண் 53-சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை, கலைஞர் மகளிர் உரிமைத் தொகைக்கு கூடுதல் செலவினமாக 1,055.34 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

பேரவைத் தலைவர் அவர்களே, 2023-2024 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன். வணக்கம்.

இவ்வாறு - நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு உரையாற்றினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு திருவிழா! பெருங்கவிக்கோ வா.மு.சே.தலைமையில்

# 100 கவிஞர்கள் பங்கேற்கும் கலைஞர் நூற்றாண்டு விழாக் கவியரங்கம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைக்கிறார்!

சென்னை, பிப்.23-

தமிழ்நாட்டில் தமிழுக்கு முதன்மை! என்பதை வலியுறுத்தி, 1991ஆம் ஆண்டு முதல் எங்கும் தமிழ்! எதிலும் தமிழ் வேண்டுமென கன்னியாகுமரி முதல் சென்னை வரையில் 50 நாட்கள் நடந்து வந்தோம்!

தொடர்ந்து வரும் இப்பயணத்தில் இவ்வாண்டும் தமிழுக்கு முதன்மை! என்ற குறிக்கோடு தமிழ், தமிழ்நாட்டு மக்கள் மற்றும் உலகளாவிய தமிழ் உணர்வாளர்களின் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையும், கன்னியாகுமரி - சென்னை 12.2.2024 முதல் 24.2.2024 ஆம் நாள் வரை பரப்புரை ஊர்திப் பயணம் செய்து வருகிறோம்.

இதன் நிறைவு நாளான 24.2.2024 ஆம் நாள் இப்பயணம் சென்னையில் நிறைவடைகிறது! பல்துறை வித்தகர், உவமை கூற முடியாத உன்னதக் கவிஞர் முத்தமிழறிஞர் கலைஞர் தம் அளப்பரிய சாதனைகளைப் பாராட்டும் முகத்தான் அமைச்சர் பி.கே. சேகர்பாபு தொடங்கி வைக்க பெருங்கவிக்கோ வா.மு.சே. தலைமையில் 100 கவிஞர்கள் பங்கேற்கும் கலைஞர் நூற்றாண்டு விழாக் கவியரங்கம் நாளை (24.2.2024-சனிக்கிழமை) காலை 9.30 மணி முதல் மாலை 7.30 மணி வரை 573, மேற்கு நிழற்சாலை, மகாகவி பாரதியார் நகர், வியாசர்பாடி, சென்னை -39 (அண்ணல் அம்பேத்கர் கல்லூரி அருகில் அமைந்துள்ள குரு சந்திரா திருமண மாளிகையில் நடைபெறுகிறது. இதில் கலைஞருக்கு வீரவணக்கம் - புகழ் அஞ்சலி பாடஉள்ளனர்.

தமிழ் மாமணி வா.மு. சே.திருவள்ளுவர் (இயக்குநர், பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்) முனைவர் சோ. கருப்பசாமி, அருட்செல்வர் கூ.குருமூர்த்தி (குரு சந்திரா திருமண மாளிகை), மதுரை கவி மறத்தமிழன், தலைவர் அண்ணாநகர் தமிழ்ப்பேரவை, செம்மொழிப் போராளி க.ச.கலையரசன், கவிச்சுடர் முனைவர் சிந்தைவாசன், கவிஞர் வீர முத்து ஆகியோர் விழா ஏற்பாட்டுக் குழுவினராக செயல்படுகின்றனர்.

விழா நிறைவில் உலகத் தமிழ்ச் சங்க நிறுவனர் வி.ஜி.சந்தோசம், பேராசிரியர் மா.செல்வராசு, கந்தசாமி நாயுடு கல்லூரி முதல்வர் முனைவர் வா.மு. சே.முத்துராமலிங்க ஆண்டவர், மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் சு.சுதர்சனம், பேராசிரியர் பொன்.செல்வகணபதி, தமிழ்ச்செம்மல் மேலை பழனியப்பனார் ஆகியோர் வாழ்த்துரையாற்றுகின்றனர்.

முனைவர் சோ.கருப்பசாமி நன்றி கூறுகிறார்.

சேந்தமங்கலம் தொகுதி

# கொல்லிமலையில்-மரவள்ளிக்கிழங்கு கொள்முதல் நிலையம் அமைப்பீர்!

## சட்டப்பேரவையில் கே.பொன்னுசாமி வலியுறுத்தல்!

**சென்னை, பிப்.23-**

**சட்டப்பேரவையில், சேந்தமங்கலம் தொகுதி, கொல்லி மலையில் மரவள்ளிக்கிழங்கு கொள்முதல் நிலையம் அமைத்திட வேண்டும் என கே.பொன்னுசாமி வலியுறுத்தினார்.**

**இது குறித்து அவர் எழுப்பிய கேள்வியும் அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் அளித்த பதிலும் வருமாறு:-**

**கே.பொன்னுசாமி:** சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலையில் மிளகு, காப்பி மற்றும் மரவள்ளிக் கிழங்கு ஆகியவற்றிற்கான கொள்முதல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

**அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன்:** S.N. 210, கொல்லி மலை லேம்ப் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக, சங்க உறுப்பினர்களிடமிருந்து மிளகு, காப்பி போன்ற வேளாண் விளைப்பொருட்கள் நியாயமான விலைக்கு கொள்முதல் committee மூலமாக ஏற்கெனவே கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. எனவே, புதிதாக ஒரு கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

**கே.பொன்னுசாமி:** நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதி, கொல்லி மலை ஒன்றியத்தில் அதிகப்படியாக மிளகு, காப்பி உற்பத்தி செய்யப் பட்டு வருகிறது. அப்படி உற்பத்தி செய்யப்படுகின்ற விளைப்பொருட்கள் S.N.210 கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக குறைந்த அளவில் கொள்முதல் செய்கிறார்கள். இக்காலக்கட்டத்தில் அதிகப்படியான மிளகு இருப்பு வைக்கின்ற நிலை ஏற்படுகிறது. அதனால் கொள்முதல் நிலையம் அமைத்தால் விவசாயிகளுக்கு உரிய விலைகள் கிடைக்கும் என்பதால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன்:** ஏற்கெனவே செயல்பாட்டில் இருக்கின்ற காரணத்தால் தேவைக்கேற்றவாறு, ஒருவேளை பொருட்களின் உற்பத்தி அதிகமாக இருப்பின், அவற்றை விரிவுபடுத்துவ தில் ஏதுமில்லை. புதியதாக ஒரு மையம் அமைப்பதற்கான வாய்ப்பு ஏற்படவில்லை. எதிர்காலத்தில் அதுகுறித்து பரிசீலிக்கப் படும்.



**கே. பொன்னுசாமி:** கொல்லி மலை மிளகு மருத்துவ குணம் கொண்டது. உலகம் முழுவதும் கொரோனா தொற்று பரவிக்கொண்டிருந்த காலக்கட்டத்தில்கூட கொல்லிமலையிலே அதிகளவில் பாதிப்பு ஏற்படவில்லை. ஆகவே, டெல்டா விவசாயிகளுக்கு நெல் கொள்முதல் நிலையம் அமைப்பது போன்று, கொல்லிமலையிலே மிளகு சாகுபடி, மரவள்ளி பயிர்களுக்கு கொள்முதல் நிலையம் அமைக்க ஆவன செய்யுமாறு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன்:** விரிவான விடையை நான் உறுப்பினர் அவர்களுக்கும், சபைக்கும் தருகின்றேன். சேந்தமங்கலம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கொல்லிமலை லேம்ப் கூட்டுறவுச் சங்கத்தில், உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல சிறப்பான மிளகு கொள்முதல் செய்யப்படுகிறது. காப்பி போன்ற பொருட்களை அவற்றின் தரம், ஈரப்பதம் ஆகியவற்றை பரிசோதித்து உரிய முறையில் நியாயமான விலைக்கு கொள்முதல் committee மூலமாக விவசாய உற்பத்திக் குழுக்கள், அதாவது FPO மூலமாகவும், மிளகு, காப்பி கொள்முதல் செய்யப்படுகிறது. அப்பொருட்களை, சங்கத்தில் உள்ள பதப்படுத்தும் ஆலையின் மூலமாக பதப்படுத்தி, மதிப்புக் கூட்டப்பட்ட பொருளாக மாற்றி, தரமாக packing செய்யப்பட்டு, கூட்டுறவு நியாய விலைக் கடைகள் மற்றும் Tampcol ஆகிய நிறுவனங்கள் மூலமாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

எனவே, இச்சங்கத்தின் உறுப்பினர்கள் விளைவிக்கும் மரவள்ளிக் கிழங்கினைப் பொறுத்தவரையில், சோளக் காடு கொள்முதல் மையம் மூலமாக ஏற்கெனவே கொள்முதல் செய்து, Sago ஆலைக்கு அனுப்பப்பட்டு வந்தது. ஆனால், தற்போது காபி, மிளகு, அன்னாச்சி மற்றும் வாழை உள்ளிட்ட பயிர்கள் விளைவிக்கப்படும் பரப்பளவு அதிகரித்திருக்கிறது. மரவள்ளி சாகுபடி செய்கின்ற விவசாயிகள் பரப்பளவை குறைத்திருக்கிறார்கள். ஆகவே, மேற்படி கொல்லிமலைப் பகுதியில் மரவள்ளிக் கிழங்கு பயிரிடப்படும் பரப்பளவு குறைந்ததாலும், ஆலை அதிபர்கள் ஒத்துழைப்பு இல்லாத நிலையிலும் கொல்லிமலையில் மரவள்ளிக் கிழங்கு கொள்முதல் நிலையம் உடனடியாக அமைக்க வழிவகை இல்லை.

இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.



விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் ஒன்றியம் சிறுவாடி ஊராட்சியில் பிரதம மந்திரிகுடியிருப்பு திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் திறந்து வைத்து பயனாளிகளிடம் ஒப்படைத்தார். உடன் விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் டாக்டர் பழனி, ஒன்றியக் குழு தலைவர் தயாளன், துணை சேர்மன் பழனி, மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன் உள்ளனர்.

“அரசுப் பள்ளி என்பது வறுமையின் அடையாளமல்ல - பெருமையின் அடையாளம்” என்பதை உறுதி செய்திட

# அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கையினை அதிகரித்திடுவீர்!

## ஆசிரியர்கள் - பணியாளர்களுக்கு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வேண்டுகோள்!

சென்னை, பிப்.23-

2024-2025 ஆம் கல்வியாண்டில், அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கையினை அதிகரிக்க வேண்டும் என்ற உன்னத நோக்கத்துடன் அலுவலர்கள், இருபால் ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் முழுமுயற்சியோடு பணியாற்றிட வேண்டுமென பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வேண்டுகோள் விடுத்துள்ளார்.



இதுகுறித்து அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

“கல்வி மட்டுமே சமத்துவம் மலரச்செய்யும் மிகப் பெரிய ஆயுதம்”என்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கூற்றை மெய்ப்பித்திடும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எண்ணற்ற பல திட்டங்களை அறிவித்து அதனை சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள்.

இந்திய ஒன்றியத்தில் உள்ள மாநிலங்களில் கல்வி வளர்ச்சியில் நம் தமிழ்நாடு முன்னிலை பெற வேண்டும் என்ற உன்னத நோக்கத்தோடு, தொடங்கப்பட்ட பல்வேறு புதிய திட்டங்களால் தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறை வெற்றிநடை போட்டு வருவதைக் காணலாம்.

கல்வியில் ஒரு மாநிலம் உயர்ந்த நிலையைப் பெறுகின்ற பொழுது, பல்வேறு துறைகளில் இயல்பாகவே உயர்வு பெறும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பள்ளிக் கல்விக்கான நிதி ஒதுக்கீட்டை ஒவ்வொரு ஆண்டும் படிப்படியாக அதிகப்படுத்தியுள்ளார்கள். எந்த நோக்கத்திற்காக நிதி ஒதுக்கீடு அதிகரித்துள்ளதோ அதை மனதிற்கொண்டு, அந்நோக்கத்தைச் சிறப்பாக நிறைவேற்ற வேண்டியது நம் அனைவரின் கடமையாகும்.

**கல்விக்கான முதலீடு!**

முதலமைச்சர் அவர்கள் பள்ளிக்கல்வித் துறைக்கான நிதி ஒதுக்கீட்டை செலவாகக் கருதாமல் கல்விக்கான முதலீடாகக் கருதுவதாக தெரிவித்துள்ளார்கள். இதனை பள்ளிக்கல்வித் துறையில் உள்ள அலுவலர்கள், இருபால் ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைவரும் உணர்ந்து செயல்பட வேண்டும்.

மாணவர் நலமே மாநில வளம் என்னும் உயரிய எண்ணத்தோடு செயல்பட்டு வருவதை நாம் அனைவரும் நன்கு அறிவோம். முதலமைச்சர் அவர்கள் பள்ளிக் கல்வித்துறைக்கு 2021-22 -ஆம் நிதியாண்டிற்கு ரூபாய். 32,599.54 கோடியும்; 2022-23-ஆம் நிதியாண்டிற்கு ரூ.36,895.89 கோடியும்; 2023-24-ஆம் நிதியாண்டிற்கு ரூ.40,299.32 கோடியும் ஒதுக்கீடு செய்துள்ளார்கள். நடப்பு ஆண்டில் ரூபாய். 44,042 கோடி ஒதுக்கியுள்ளார்கள். ஆக மொத்தம் ரூபாய். 1,53,796 கோடி பள்ளிக்கல்வித் துறைக்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**இடைநிற்றல் குறைந்துள்ளது!**

தமிழ்நாடு அரசு கல்வித் துறைக்கென இதுவரை 57-திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி வருவதால் மாணவர்களின் கல்வித் தரம் உயரும் வகையில் மிகப் பெரிய வளர்ச்சியை கல்வித்துறை பெற்றுள்ளது என்பதை மகிழ்வோடு தெரிவித்துக்கொள்கிறேன். இதனால் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை விகிதம் உயர்ந்துள்ளது. இடைநிற்றல் மிகவும் குறைந்துள்ளது.

இல்லம் தேடிக்கல்வித் திட்டத்தால் கொரோனா காலத்தில் ஏற்பட்ட கற்றல் தேக்க நிலை முற்றிலும் குறைந்துள்ளது. எண்ணும் எழுத்தும் திட்டத்தின் மூலம் மாணவர்களின் கற்றல் திறன் மேம்பட்டுள்ளது. “நான் முதல்வன்” திட்டத்தால் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களில், பலர் நாட்டின் முதன்மை உயர்கல்வி நிறுவனங்களில் உயர் கல்வி பயில வாய்ப்பு உருவாகியுள்ளது.

கலைத்திருவிழாவின் மூலம், மாணவர்களிடத்தில் பொதிந்துள்ள பல்வகை ஆற்றலை வெளிக்கொணர்கின்ற சூழல் உருவாகியுள்ளது. “நம் பள்ளி நம் பெருமை” திட்டத்தினால் அரசுப் பள்ளிகளின் தேவையைப் பூர்த்தி செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**காலை உணவுத் திட்டத்திற்கு பெரும் வரவேற்பு!**

“முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்” இந்திய ஒன்றியத்திலேயே, முதன்முதலாக நம் தமிழ்நாட்டில் தான் முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்டு, மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளது. இதனால் பள்ளிக்கு வருகை கூடியுள்ளதோடு கற்கும் ஆர்வமும் கூடியுள்ளதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். இதன் மூலம் “வயிற்றுக்குச் சோறிட வேண்டும் - இங்கு வாழும் மனிதருக்கெல்லாம் பயிற்றிப் பல கல்வி தந்து - இந்தப் பாரை உயர்த்திட வேண்டும்“ என்ற மகாகவியின் கனவு நிறைவேறியிருக்கிறது. “மணற்கேணித் திட்டம்” - நன்கு திட்டமிட்ட வழிகாட்டுதலுடன் கூடிய கற்றல் பயணத்திற்கு வழிவகுத்து கற்றனைத்தூறும் அறிவைச் சுரந்து கொண்டிருக்கிறது.

மாணவர்களின் மனதிற்கு மகிழ்வூட்டும் கல்விச் சுற்றுலா, ஊஞ்சல், தேன்சிட்டு இதழ்கள், தமிழ்மொழியின் ஆற்றலை பெருமையை மாணவர்கள் விரும்பி அறிந்திட தமிழ்க்கூடல், மாவட்டம் தோறும் புத்தகக் கண்காட்சி, வாசிப்பு இயக்கம் போன்ற பல்வேறு நல்ல திட்டங்களை முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகின்றது.

“விழுதுகள்” திட்டம் மூலம் அரசுப் பள்ளிகளில் பயின்ற மேனாள் மாணவர்களை அழைத்து வந்து அரசுப் பள்ளிகளின் கட்டமைப்பு மேம்பட அவர்களின் பங்களிப்பை உறுதி செய்யும்முன்னெடுப்புகள் நடைபெற்று வருகின்றன.

பேராசிரியர் அவர்களின் நூற்றாண்டினை முன்னிட்டு, பள்ளிக் கல்வி வளர்ச்சிக்கென ரூபாய். 7,500 கோடி மதிப்பீட்டில் “பேராசிரியர் அன்பழகனார் பள்ளி மேம்பாட்டுத் திட்டம்” என்ற மாபெரும் திட்டத்தை 5 ஆண்டுகளில் செயல்படுத்திட அறிவிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று இதுவரை, 2487 கோடி மதிப்பிலான 3601 வகுப்பறைகள், ஆய்வகங்கள், உள்ளிட்ட பல்வேறு கட்டடங்கள் திறக்கப் பட்டுள்ளன. இந்நிதியாண்டில் மேலும் ரூபாய். 1,000 கோடி பள்ளிக் கட்டமைப்பிற்கென ஒதுக்கீடு செய்யப்படும் என அறிவிக் கப்பட்டுள்ளது.

அரசுப் பள்ளி மாணவர்களை சாதனையாளர்களாக மாற்றும் உயர்ந்த நோக்கத்தோடு கடந்த மூன்று ஆண்டுகளில் 38 மாதிரிப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. மேலும் பல்வேறு மாவட்டங்களில் உள்ள 28 பள்ளிகள் தகைசால் பள்ளிகளாக தரம் உயர்த்தப் பட்டுள்ளன.

**80 ஆசிரியர்களுக்கு கையடக்க கணினி!**

மேலும் நவீன தொழில்நுட்பத்தை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தவும் உயர்தர கற்றல் - கற்பித்தல் சூழலை உருவாக்கவும், அனைத்து அரசு நடுநிலைப் பள்ளிகளில் 8,209 உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள் (Hi-Tech labs) மற்றும் 22,931 தொடக்கப் பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள் (Smart Class rooms) அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்பட உள்ளன. மேலும் 80,000 ஆசிரியர்களுக்கு கையடக்கக் கணினி வழங்கப்பட உள்ளது, இதனால் வரும் கல்வியாண்டில் அனைத்து அரசு பள்ளிகளிலும் மாணவர்களுக்கு உயர்தர தொழில்நுட்ப வசதிகளுடன் கற்றல் கற்பித்தல் பணிகள் நடைபெற வாய்ப்பு ஏற்படுத்தப் பட்டுள்ளது.

எனவே, அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள், மாவட்டக் கல்வி அலுவலர்கள், வட்டாரக் கல்வி அலுவலர்கள், தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், பள்ளி மேலாண்மைக் குழு மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழகத்தினர் ஆகியோர் ஒன்றிணைந்து அனைத்து பள்ளி வயதுடைய குழந்தைகளையும் அரசுப் பள்ளிகளில் சேர்த்திட பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி மாணவர் சேர்க்கையை அதிகப்படுத்திட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

“அரசுப் பள்ளி என்பது வறுமையின் அடையாளம் அல்ல

பெருமையின் அடையாளம்” என்பதை உறுதி செய்வோம்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

# கழக தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு வேலூர் வருகை!

## க.தேவராஜி எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

திருப்பத்தூர், பிப்.23-

கழக தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு வேலூர் வருகைத் தர உள்ளதால் அனைத்துத் தரப்பினரையும் கலந்து கொள்ள செய்ய திருப்பத்தூர் மாவட்ட செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளனர்.



இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு : தமிழ்நாடு முதலமைச்சரும், கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவுரையின்படி, 2024 ஆம் ஆண்டிற்கான நாடாளுமன்ற தேர்தலுக்கான தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு கழக துணை பொதுச்செயலாளர், நாடாளுமன்ற கழக குழு துணைத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி, தலைமையில் டி.கே.எஸ்.இளங்கோவன், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் பி.டி.ஆர். பழநிவேல் தியாக ராஜன், தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி.செழியன் எம்.எல்.ஏ, சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ, கே.ஆர்.என்.ராஜேஸ்குமார் எம்.பி, எம்.எம்.அப்துல்லா எம்.பி, சென்னை மேயர் பிரியா உள்ளிட்ட குழுவினர் இன்று (23 ஆம் தேதி - வெள்ளிக்கிழமை) காலை 9 மணிக்கு வேலூர் புதிய நகராட்சி அலுவலகம் எதிரில் பேபி மஹாலில் பல்வேறு தரப்பினரை சந்தித்து தேர்தல் அறிக்கையில் இடம்பெற வேண்டிய திட்டங்கள் குறித்து கோரிக்கை மனுக்களை பெற உள்ளனர்.

அதுசமயம் திருப்பத்தூர் மாவட்டத்தை சேர்ந்த தொழில்துறையினர், வியபாரிகள், கல்வியாளர்கள், விவசாயிகள், சிறுகுறு தொழில் முனைவோர், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், மாணவர் சங்கங்கள், ஒன்றிய அரசின் துறைகளின் வளர்ச்சியில் ஆர்வமுள்ள சமூக ஆர்வலர்கள், தொண்டு நிறுவனங்கள், அரசு மற்றும் தனியார் துறை ஊழியர்கள், பொது மக்கள் மற்றும் கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் கலந்து கொண்டு தங்களது கருத்துகளை மனுக்களாக வழங்கிட ஏதுவாக மேற்கண்ட அனைவருக்கும் தகவல் தெரிவித்து அவர்களை வேலூருக்கு அழைத்து வர உரிய ஏற்பாடுகளை அந்தந்த நகர, ஒன்றிய, பேரூர் செயலாளர்கள் செய்ய கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் அறிக்கை விடுத்துள்ளனர்.



கழகத் தலைவர்–தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் காணொளி காட்சி மூலம் புதியதாக கட்டி முடிக்கப்பட்ட சேலம் மாவட்டம் அயோத்தியாப்பட்டணம் ஊராட்சி ஒன்றியம் அலுவலகத்தை திறந்து வைத்தார். இதனையடுத்து ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் பொன்.கௌதம சிகாமணி, கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் ஆகியோர் திறந்து வைத்தனர். நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர் சுரேஷ்குமார், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ. ஆறுமுகம், ஒன்றிய குழு தலைவர் ஹேமலதா விஜயகுமார், துணை தலைவர் புவனேஸ்வரி செந்தில்குமார், ஒன்றிய செயலாளர்கள் விஜயகுமார், ரத்தினவேல், முன்னாள் எம்.எல்.ஏ. புஷ்பராஜ், சங்கர், கோபால், சந்திரமோகன் மற்றும் அரசு அதிகாரிகள் தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.